**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 26.03.2026 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 26.03.2026 – வியாழக்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

இந்தியாவின் பெட்ரோலியம் மற்றும் LPG வரத்து நிலவரம், முற்றிலும் பாதுகாப்பாக, **கட்டுப்பாட்டிலேயே** உள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் ஜேவரில், புதிதாக கட்டப் பட்டுள்ள, **நொய்டா சர்வதேச விமான நிலையத்**தை வரும் சனிக்கிழமை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.

புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை **விலக்கிக் கொள்ளும் அவகாசம்**, இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

புதுச்சேரியில் பணம் மற்றும் பரிசுப் பொருள் விநியோகத்தைத் தடுக்க அனைத்துத் தொகுதிகளிலும், **ட்ரோன் மூலமான கண்காணிப்பு** மேற்கொள்ளப்படும் என, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார்.

## LPG – அரசு -1 (19)

இந்தியாவின் பெட்ரோலியம் மற்றும் LPG வரத்து நிலவரம், முற்றிலும் பாதுகாப்பாக, கட்டுப்பாட்டிலேயே உள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அனைத்து சில்லறை எரிபொருள் விற்பனை நிலையங்களிலும், கையிருப்பு போதிய அளவில் உள்ளதாகவும், தட்டுப்பாடு இல்லை என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. தேவையற்ற பீதியை பரப்பும் நோக்கத்துடன் வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரச்சாரத்தை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தியா தற்போது, உலகெங்கிலும் உள்ள சுமார் 41 ஆதாரங்களில் இருந்து, கச்சா எண்ணெய் பெற்று வருவதாகவும், நாட்டின் எல்லா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும், 100 சதவிகிதத்திற்கும் அதிகமான செயல் திறனுடன் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மொத்தம் 74 நாட்களுக்குத் தேவையான எரிபொருளை கையிருப்பில் வைத்துக் கொள்ளும் வசதிகள் இந்தியாவில் இருப்பதாகவும், தற்போதுள்ள கையிருப்பு, சுமார் 60 நாட்களுக்கு போதுமானது என்றும், அமைச்சகம் கூறியுள்ளது. உள்நாட்டு அளவிலான LPG உற்பத்தி நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன்னாக, சுமார் 40 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளதாகவும், இது நாட்டின் மொத்த LPG தேவையில் சுமார் 60 சதவிகிதம் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**LPG – அரசு -2 (11**

எண்ணெய் நிறுவனங்கள் தினசரி 50 லட்சம் LPG சிலிண்டர்களை வெற்றிகரமாக விநியோகித்து வருவதாகவும், எரிவாயு கிடைக்காமல் போகலாம் என்ற அச்சத்தால் 89 லட்சமாக அதிகரித்த, சிலிண்டர் பதிவுகளின் எண்ணிக்கை தற்போது மீண்டும் 50 லட்சமாக குறைந்து விட்டதாகவும், தகவல் வெளியிடப் பட்டுள்ளது. வர்த்தக LPG ஒதுக்கீடுகளும், மாநில அரசுகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் 50 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளதால், பதுக்கல் அல்லது கள்ளச் மார்க்கெட் விற்பனை இல்லை என்றும், அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா மற்றும் இதர நாடுகளில் இருந்து, 800 டன் LPG வரத்து ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு, இந்தியாவிற்கு வந்து கொண்டிருப்பதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது.

**மோடி விமான நிலையம்-1 (6)**

உத்தரப்பிரதேச மாநிலம் ஜேவரில், முதல் கட்ட நொய்டா சர்வதேச விமான நிலையத்தை வரும் சனிக்கிழமை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கிறார். டெல்லி தலைநகரப் பிரதேசத்திற்கான முக்கியத் தலைவாசலாகவும், உலகளாவிய விமானப் போக்குவரத்து கேந்திரமாக

மேம்படுவதற்கான இந்தியாவின் பயணத்தில், முக்கிய மைல் கல்லாகவும், நொய்டா விமான நிலையம் அமைந்துள்ளது. இது குறித்து கூடுதல் தகவல்கள்…

**(வாய்ஸ்)**

**மோடி விமான நிலையம்-2 (12)**

**(வாய்ஸ்)**

நீடித்த அடிப்படையில், எதிர்காலத் தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில், மொத்தம் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தில், சுற்றுச் சூழலுக்கு ஏற்ப கார்பன் உமிழ்வை குறைப்பதற்கான பல்வேறு நவீன அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. ஆரம்பத்தில், ஆண்டிற்கு 12 மில்லியன் பயணிகளை கையாளும் திறன் பெற்றுள்ள இந்த விமான நிலையம், கட்டம் கட்டமான முறையில், ஆண்டுக்கு 70 மில்லியன் பயணிகளை கையாளும் திறனுக்கு உயர்த்தப்பட உள்ளது. மல்டி-மோடல் சரக்கு மையம் மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையத்துடன் கூடிய நொய்டா சர்வதேச விமான நிலையத்தில், ஆண்டுக்கு இரண்டரை லட்சம் டன் சரக்குகளை கையாள முடியும் என்றும், பிற்பாடு இதை 18 லட்சம் டன்னாக உயர்த்திக் கொள்ள இயலும் என்றும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**ஒப்பந்தம் (8)**

செயற்கை நுண்ணறிவு, **ஆன் லைன் கேமிங்** உள்ளிட்ட துறைகள் சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் புதுமை படைப்பாளிகள் மற்றும் தொழில்முனைவோருக்குத் தேவையான உதவிகளை வழங்குவது குறித்து, மத்திய தொழில் – வர்த்தக அமைச்சகத்தின் தொழில் பெருக்கத் துறை, கிராஃப்ட் - ஆன் இண்டியா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. நாட்டின் படைப்பு திறன்சார் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், மேலும் ஒரு முக்கிய முயற்சியாக இந்த ஒப்பந்தம் திகழும் என்று, துறையின் இணைச் செயலர் திரு. சஞ்சீவ், நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

**மருத்துவ காப்பீடு (11)**

இந்தியாவின் மருத்துவ காப்பீட்டுத் துறை, ஆண்டுக்கு 9 சதவிகித அளவில், வளர்ச்சி அடைந்து வருவதாக, மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. 2024-25ஆம் நிதியாண்டில், மருத்துவ காப்பீட்டுத் துறையின் ப்ரீமியம் வசூல், 1 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி அதிகரித்து இருப்பதாகவும், சுகாதாரம் மற்றும் மருத்துவ காப்பீட்டின் அவசியம் குறித்து, மக்களிடையே விழிப்புணர்வு அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. காப்பீடு பெற்றவர்கள் பணமற்ற முறையில், மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளத் தேவையான நடைமுறைகளை காப்பீட்டு நிறுவனங்கள் நிறைவேற்றி முடிக்க, இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம், குறிப்பிட்ட கால வரம்புகளை நிர்ணயித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

**வேட்பு மனு (7)**

புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் அவகாசம், இன்று பிற்பகல் 3 மணியுடன் முடிவடைந்த நிலையில், விலக்கிக் கொள்ளப்பட்ட மனுக்கள் மற்றும் இறுதியாக தேர்தல் களத்தில் உள்ள வேட்பாளர்கள் பற்றிய விவரங்கள் இன்று மாலை வெளியாகும் என எதிர் பார்க்கப் படுகிறது. புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில், கடந்த 24 ஆம் தேதி நடைபெற்ற வேட்பு மனு பரிசீலனைக்குப் பின்னர் 366 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

**ஜவஹர் -1 (9)**

புதுச்சேரியில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருள் வழங்கப்படுவதைத் தடுக்க அனைத்துத் தொகுதிகளிலும், ட்ரோன் மூலமான கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார். தேர்தல் கால செய்தி சேகரிப்புக் குறித்து, மத்திய அரசின் பத்திரிக்கை தகவல் அலுவலகம் சார்பில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, பத்திரிக்கையாளர்களுக்கான பயிலரங்கில் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். மாநிலத்தின் எல்லாத் தொகுதிகளிலும், ட்ரோன் மூலமான கண்காணிப்பு மேற்கொள்ளப் படுவது, நாட்டிலேயே இதுதான் முதல் முறை என்று, அவர் கூறினார்...

**(வாய்ஸ்-ஜவஹர்)**

ஜவஹர் - 2 (16)

புதுச்சேரியில் அனைத்துத் தொகுதிகளிலும், இறுதியாக களத்தில் உள்ள வேட்பாளர்கள் பற்றிய விவரங்கள் தெரிய வந்தவுடன் பறக்கும் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்தார். பணம்-பொருள் உட்பட எவ்விதமான தாக்கங்களுக்கும் இடம் கொடாமல், முற்றிலும் மனசாட்சி அடிப்படையில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து, வாக்காளர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, மெய்ப்பொருள் என்ற பெயரில், பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் கூறினார். இம்முறை தேர்தல் நடைமுறைகளை நேரில் காண, 15 நாடுகளில் இருந்து, தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் பிரதிநிதிகள், புதுச்சேரி வரவிருப்பதாக, திரு. ஜவஹர் மேலும் தெரிவித்தார்.

புதுச்சேரி காவல்துறை கண்காணிப்பாளர் திரு.R. கலைவாணன் பேசுகையில், தேர்தல் முறைகேடுகளை திறம்பட்ட முறையில் தடுக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகக் கூறினார். புதுச்சேரி பிராந்தியத்தின் 19 இடங்களிலும், காரைக்காலில் 10 மற்றும் ஏனாமில் 10, மாஹேயில் 7 இடங்களிலும், சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

கண்காணிப்புப் பணிகளை தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ள, தொகுதிக்கு 3 பறக்கும் படைகள், சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக அவர் கூறினார். புதுச்சேரியில், தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தபின்னர், இதுவரை, 15 லட்சம் ரூபாய் ரொக்கப் பணமும், சுமார் 15 ஆயிரம் லிட்டர் மதுபானம், மற்றும் ஆயிரத்து 500 கிலோ புகையிலைப் பொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளதாக, திரு. கலைவாணன் தெரிவித்தார். உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட, சுமார் 3 கிலோ தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு. V. பழனிச்சாமி, இப்பயிலரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையில், பொய்த் தகவல்களையும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான போலி வீடியோக்களையும், கண்டறிந்து தவிர்ப்பதும், பொதுமக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதுமே, பத்திரிக்கையாளர்களுக்கு தற்போதுள்ள முக்கிய சவால் என்றார். PIB இயக்குநர் திரு. அருண் குமார், ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு அதிகாரி திரு. அழகு துரை, மத்திய மக்கள் தொடர்பகத்தின் களவிளம்பர அதிகாரி திரு. சக்தி வேல் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**மருத்துவச் சீட்டு (8)**

புதுச்சேரியில் 100 சதவிகித வாக்குப் பதிவை உறுதிப் படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய மருத்துவச் சீட்டு வழங்கும் நடைமுறையை, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் இன்று தொடக்கி வைத்தார். மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் உதயசங்கர் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு சார்பில், இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

**காரைக்கால் விழிப்புணர்வு (6)**

100 சதவிகித வாக்குப் பதிவை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன் காரைக்காலில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் நடைபயணத்தை, மாவட்ட ஆட்சியர் திருமதி. இஷிதா ராட்டி, மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட இளம் வாக்காளர்களும், தேர்தல் எழுத்தறிவு மன்ற பொறுப்பாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

**காரைக்கால் மருத்துவமனை (5)**

காரைக்கால் அரசுப் பொது மருத்துவமனையில் நாளை, நரம்பியல், இருதயவியல் மற்றும் சிறுநீரகவியல் நிபுணர்கள் மூலம் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவச் சேவைகள் வழங்கப்பட உள்ளன. காரைக்கால் பகுதி மக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**வானிலை (8)**

இன்றும் – நாளையும், தமிழ்நாடு, புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், நாளை மறுநாள் முதல் 30ஆம் தேதி வரை, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி - காரைக்கால் பகுதிகைளைப் பொறுத்தவரை, ஏப்ரல் 1ஆம் தேதி வரை, வறண்ட வானிலை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானலில், 9.6 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

**கேலோ இண்டியா (10)**

சத்தீஸ்கரில் முதலாவது கேலோ இண்டியா பழங்குடி விளையாட்டு போட்டிகளின் இரண்டாம் நாளான இன்று, ஹாக்கி, கால்பந்து, நீச்சல், பளுதூக்குதல் போன்ற போட்டிகள், ராய்ப்பூரில் நடைபெற்றன. இதுவரையிலான பதக்கப் பட்டியலில், கர்நாடகா, 5 தங்கம் உட்பட 7 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது. ஒடிசா 2ஆவது இடத்திலும், அஸ்ஸாம் 3ஆவது இடத்திலும் உள்ளன. ராய்ப்பூர், பஸ்தார் உள்ளிட்ட இடங்களில், ஏப்ரல் 3ஆம் தேதி வரை நடைபெறும் கேலோ இண்டியா பழங்குடி விளையாட்டுப் போட்டிகளில், 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர் – வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

**விபத்து (10)**

ஆந்திர மாநிலம் மர்க்காபுரம் மாவட்டத்தில், இன்று அதிகாலை, தனியார் பேருந்து, லாரிமீது மோதி, தீ பிடித்த தால் ஏற்பட்ட விபத்தில், பல உயிர்கள் பலியானது குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் துயரம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கும், தலா 50 ஆயிரம் ரூபாய் உதவி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த விபத்தில், குறைந்தது 13 பேர் உடல் கருகி உயிரிழந்தனர், 28 பேர் காயமடைந்து ஓங்கோல் உள்ளிட்ட இடங்களில் மருத்துவ மனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

இந்தியாவின் பெட்ரோலியம் மற்றும் LPG வரத்து நிலவரம், முற்றிலும் பாதுகாப்பாக, **கட்டுப்பாட்டிலேயே** உள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் ஜேவரில், புதிதாக கட்டப் பட்டுள்ள, **நொய்டா சர்வதேச விமான நிலையத்**தை வரும் சனிக்கிழமை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.

புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை **விலக்கிக் கொள்ளும் அவகாசம்**, இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

புதுச்சேரியில் பணம் மற்றும் பரிசுப் பொருள் விநியோகத்தைத் தடுக்க அனைத்துத் தொகுதிகளிலும், **ட்ரோன் மூலமான கண்காணிப்பு** மேற்கொள்ளப்படும் என, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK**

**ராம நவமி (13)**

இன்று ஸ்ரீராம நவமி திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். சத்தியம் – தர்மம் மற்றும் நீதி அடிப்படையிலான, பகவான் ஸ்ரீராமரின் போதனைகளை பின்பற்றி, **சிந்தனை-சொல்–செயல்** அனைத்தின் மூலமாகவும், நாட்டிற்கான கடமைகளை செவ்வனே ஆற்ற அனைவரும் உறுதி ஏற்போமாக என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, பகவான் ஸ்ரீராமர் குறித்த காணொளி ஒன்றை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, எளிமை-தியாகம் மற்றும் கட்டுப்பாடு நிறைந்த பகவான் ஸ்ரீராமரின் வாழ்க்கை, எந்தவொரு சூழலையும் முழு பலத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதையே நமக்கு உணர்த்துவதாகக் கூறியுள்ளார்.

**ரிஜிஜு (14)**

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிச் சூழல்களுக்கு இடையிலும், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்தியப் பொருளாதாரம் சிறப்பாகவே செயல்பட்டு வருவதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார். தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசுகையில், இந்தியாவின் எரிசக்தி ஆதாரங்கள் வெளிநாடுகளை நம்பி உள்ள போதிலும், நெருக்கடிச் சூழலை இந்தியா நன்றாகவே நிர்வகித்து வருவதாகக் கூறினார். உலக அளவில் இந்தியாவின் வலுவான அந்தஸ்து மற்றும் தூதரக ரீதியான அரசின் பல்வேறு முயற்சிகளால், இந்திய கப்பல்கள் ஹோர்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பாகவே கடந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். அமெரிக்க அதிபர், இஸ்ரேலிய பிரதமர், ஈரானிய அதிபர், மற்றும் வளைகுடா நாடுகளின் அரசுத் தலைவர்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடர்ச்சியான முறையில் தொடர்பு கொண்டு வருவதாக, அவர் மேலும் கூறினார்.

## LPG கப்பல் (6)

இதற்கிடையே, 16 ஆயிரம் டன் LPG ஏற்றிய அப்பல்லோ ஓஷன் LPG டேங்கர் கப்பல், நேற்று இரவு மங்களூர் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததைத் தொடர்ந்து, கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும் 2 LPG டேங்கர் கப்பல்கள் மங்களூர் துறைமுகத்தை விரைவில், வந்தடையும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.